https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

28th JANUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 64



## தலைவர் ஒரு பக்கம் உறுப்பினர்கள் மறுபக்கம்

04



# பாதாள குழுக்களின் துப்பாக்கிதாரிகளாக படையினர்



பாதாள குழுக்களின் துப்பாக்கிதாரிகளாக பல படையினர் செயற்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதாள குழுக்களின் பணத்துக்கும் போதைப்பொருளுக்கும் அடிமைப்பட்டுள்ள படையினரே இவ்வாறு செயற்பட்டு வருகின்றனர் என்றும் கடமை நேரத்திலேயே இந்த வேலையை செய்கிறார்கள் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

சில நாட்களுக்கு முன் அம்பலாந்தோட்டை மீன் வியாபாரிமீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது இரண்டு படையினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான படையினரைத் தேடி வலை விரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன்

03

# எட்கா ஒப்பந்தம் மார்ச்சில்...

இலங்கை-இந்திய நாடுகளுக்கு இடையிலான எட்கா வர்த்தக ஒப்பந்தம் மார்ச் மாதம் மேற்கொள்ளப்படும் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.இதற்கான பேச்சுக்கள் இப்போதே தொடங்கிவிட்டன என்றும் அறிய முடிகிறது.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகள் காரணமாக இந்த ஒப்பந்தம் தொடர்பான முயற்சிகள் நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டால் இலங்கை தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும் இந்திய தொழிலாளர்கள் இலங்கை தொழில் துறையைக் கைப்பற்றிவிடுவார்கள் என்றும் எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

# பொருட்களின் விலை மீண்டும் உயர்வு



கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் முதல் மூன்று மாதங்களுக்கு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரிக்கும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனால் தமிழ்-சிங்கள புது

02

## ஆடை ஏற்றுமதி 20 வீதத்தால் வீழ்ச்சி

கடந்த வருடம் ஆடை ஏற்றுமதி 20 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று சுந்தந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்கள் சம்மேளத்தின் செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பல ஆடைத் தொழில்சாலைகள் மூடப்பட்டுள்ளதோடு மேலும் பல தொழில்சாலைகள்

02



புதுசுடர்
www.puthusudar.lk
2024 JANUARY 28 - SUNDAY

# சஜித் - ரணில் இணைவு சாத்தியமா?

ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் அலைதான் இப்போது அடிக்கிறது.ஜனாதிபதி தேர்தலில் அவர் வெல்வதற்கு வாய்ப்புள்ளது என்று கூறுகின்றன ஆய்வுகள்.உளவுத் துறை அறிக்கையும் அதையே சொல்கிறது.

இதனால் அனுரவை வீழ்த்த வேண்டிய தேவை ஜனாதிபதி தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. ரணிலையும் சஜித்தையும் இணைத்தால் அனுரவை இலகுவாக வீழ்த்தலாம் என்று நினைத்துக்கொண்டு ஜனாதிபதி தரப்பினர் சிலர் இப்போது இருவரையும் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதை விடவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முக்கியமாக உள்ளது.

தேர்தலுக்கு சுமார் 10 மாதங்கள் இருக்கின்றபோதிலும் இப்போதிருந்தே அதற்கான வேலைத்திட்டங்களை தொடங்கிவிட்டார் அவர்.

அரசியல் தீர்வை வழங்குகிறேன் என்ற போர்வையில் தமிழர்களின் வாக்குகளை சுருட்டுதல்.கூட்டணிகளை அமைத்தல்,மொட்டு கட்சியை உடைத்தல்,சஜித் தரப்பை பிரித்தல் என தேர்தலை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளைத்தான் காண முடிகிறது.

அந்த வகையில்,இந்த வாரம் பேசத் தொடங்கியுள்ள விடயம் என்னவென்றால் சஜித்--ரணில் இணைவுபற்றித்தான்.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது.சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும்,சஜீத்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால்,இன்றைய காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இத்தருணத்தில் சஜித் ரணிலுடன் இணைந்து அந்த வெற்றியை அநியாயமாக இழப்பாரா?

ஜேவிபி தலைவர் அனுரகுமாரவின் வெற்றியைத் தடுப்பதற்காக சஜித்தையும் ரணிலையும் இணைப்பதற்கு ரணில் தரப்பு முற்பட்டாலும் அந்த இணைவால் அனுரவை விடவும் அதிகம் பாதிக்கப்படப்போவது சஜித் பிரேமதாஸாதான்.ரணிலின் எதிரி அனுர அல்ல சஜித்.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள்.அந்தக் கட்சியை இரண்டு,மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார்.அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொள்வதற்குத் திட்டமிட்டுதான் மொட்டு கட்சியின் நிமால் லான்ஸாவை வைத்து கூட்டணி ஒன்றை உருவாக்கி வருகிறார் ரணில்.

மொட்டில் இருந்து எப்படியும் 40 பேரை இழுத்தெடுப்பேன் என்று ரணிலுக்கு வாக்குறுதியளித்துள்ளார் லான்ஸா.இதில் லான்ஸாவும் பிரசன்ன ரணதுங்கவும் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார். தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?

## பொருட்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வருடத்தில் மக்கள் இப்போதிருப்பதை விடவும் அதிக விலை கொடுத்து பொருட்கள் வாங்க வேண்டி வரும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஆடை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா,வியட்நாம் மற்றும் மியன்மார் போன்ற நாடுகளுக்கு தங்களின் தொழில்சாலைகளை நிறுவியுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

## கிழக்கில் மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ள நன்னீர் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி



(எம்.ஐ.எம்.அஸ்ஹர் )

அன்றாடம் தொழில் செய்து தமது ஜீவனோபாயத்தை கடத்தும் மற்றுமொரு கூட்டம் தான் மீனவ சமூகம்.அன்றைய தினம் தமக்கு சரியாக மீன் படவில்லையென்றால் அந்த குடும்பத்தின் நிலை அவ்வளவுதான்.கடலையும் களப்பையும் ஆற்றையும் நம்பி இவர்கள் வாழ்வு சுழன்று கொண்டிருக்கின்றது.

கடல் கொந்தளிப்பு, வேகமான காற்று, விடாத அடைமழை, உக்கிரமான வெள்ளம் என்பன மீனவர்களுக்கு எதிரியாக தென்படும் போதெல்லாம் இவற்றையும் சவாலாக ஏற்று மீன்பிடிக்கச் சென்று உயிரிழந்தவர்களும் காணாமல் போனோரும் பலர்.

காற்று, குளிர், கடும் வெயில் தாண்டி தமது முயற்சி வெற்றி பெற்றால் அன்றைய தினம் மீனவர்கள் படும் சந்தோசத்திற்கு அளவே இல்லை.

கடலுக்கு படகுகளில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கரைக்கு திரும்பி வருவார்கள் என்பதில் எந்த உத்தரவாதமும் இல்லை. அடிப்படை

வசதிகள் எதுவுமன்றி குடிசைகளில் மனைவி மக்களுடன் மிகவும் கஸ்டமான வாழ்க்கைக்கு உள்ளாகியுள்ள இம் மீனவ சமூகம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பல உயிர்களை கடலுக்கு இரையாக்கி ,உடமைகள் இருப்பிடங்களை இழந்து நின்ற போது அவர்களுக்கு உதவிக் கரம் நீட்ட சர்வதேச தன்னார்வு நிறுவனங்கள் முன்வந்தன.

இதுவொரு பாராட்டத்தக்க விடயமாக இருந்தாலும் தாம் புரியும் தொழிலுக்கு சம்பந்தமில்லாத இடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளதால் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னேடுத்துச் செல்வதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாம் பிடிக்கும் மீன்களின் விலை அதிகரிக்கும் போது மகிழ்வுறும் இச் சமூகம் மீனின் விலை குறையும் போது மனதை தளரவிடுவதில்லை .இது தான் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழியின்றி முன்னோக்கியே செல்கின்றனர்.

உலகம் நவீன தொழில்நுட்ப துறையில் எவ்வளவு வேகமாக நகர்ந்தாலும் கிழக்கு மீனவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவோ, மீனவர்களின் பிள்ளைகளுக்கு அத் துறையில் எதிர்காலத்தை உருவாக்க எந்தவிதமான முன் ஏற்பாடுகள் எதுவுமில்லாமலிருப்பது கவலைக்குரிய விடயமாகவே உள்ளது.






கேள்வி :நீங்கள் தெரென தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கு காரணம் என்ன?

கேள்வி :உங்களது ஆதரவின் மூலம் ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ச எடுத்த பிழையான பொருளாதார தீர்மானத்துக்கு நீங்களும் பொறுப்புக்கூற வேண்டும் அல்லவா.

கேள்வி : கோத்தாவை ஜனாதிபதியாக்குவதில் நீங்கள் முன்னின்று உழைத்தீர்கள்.கடைசியில் அவர் எல்லாவற்றையும் குழப்பிவிட்டாரே.?


கேள்வி : நீங்கள் ஒரு தொழிலதிபர்.பொருளாதாரம் தொடர்பில் அனுபவமும் அறிவும் உள்ளவர்.ஏன் உங்களால் இந்த பொருளாதார பிரச்சினை வராமல் தடுக்க முடியவில்லை ?

கேள்வி :பசில் ராஜபக்ஸ நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டபோது அதையும் எதிர்த்தீர்களா?

கேள்வி : ராஜபக்ஸ குடும்பத்தை உங்களின் வர்த்தகத்தை வளர்த்துக்கொண்டீர்கள் என்று சிலர் குற்றம் சுமத்துகிறார்களே?

கேள்வி : நீங்கள் ஒரு சட்டத்தரணி. அந்தத் தொழிலை செய்யாமல் நீங்கள் வர்த்தகத்தில் இறங்கியது ஏன்?

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன்



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் மவ்பிம மக்கள் கட்சியின் தலைவரும் தெரென தொலைக்காட்சியின் முன்னாள் தலைவருமான திலித் ஜயவீர. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி :நீங்கள் தெரென தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கு காரணம் என்ன?**

பதில் : நான் நேரடி அரசியல்வாதியாக மாறப்போகிறேன்.அதை எல்லோரும் உணர வேண்டும் என்பதற்காகவே விலகினேன். அது மட்டுமல்ல இது நல்லதொரு ஒழுக்கவியலும் கூட.ஓர் அரசியல்வாதியாக தெரென தொலைக்காட்சியில் கையடிக்காமல் இருப்பதே எனது திட்டம்.

**கேள்வி :உங்களது ஆதரவின் மூலம் ஜனாதிபதியான கோத்தாபய ராஜபக்ச எடுத்த பிழையான பொருளாதார தீர்மானத்துக்கு நீங்களும் பொறுப்புக்கூற வேண்டும் அல்லவா.**

பதில் : நிச்சயமாக, பொறுப்புக்கூற வேண்டும்.அதனால்தான் நான் அரசியலுக்கே வருகிறேன்.அரசியலுக்கு வரும் திட்டம் ஆரம்பத்தில் இருந்து என்னிடம் இருந்ததில்லை.

எனது அரசியல் கட்சியான மவ்பிம மக்கள் கட்சி இந்த பிரச்சினைக்கு பதிலளிக்கும் வகையில் செயற்படும்.பிரதான கட்சிகளுக்கு மத்தியில் இது வர வேண்டும்.

எனக்கு அரசியல் புதிதல்ல.பல்கலைக்கழக வாழ்க்கையில்,இளமைக் காலத்தில் அரசியல் செய்திருக்கிறேன்.நல்ல அனுபவம் அதில் உண்டு.ஆனால்,தேசிய அரசியலுக்கு வர வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இருந்ததில்லை.இப்போதுதான் அதில் குதித்திருக்கிறேன்.

**கேள்வி :அதற்கான காரணம் என்ன ? தேசிய அரசியலுக்கு வர தாமதம் ஏன்?**

பதில் : இலங்கையின் அரசியல் தனக்கு சரி வராது என்றே நான் அப்போது நினைத்தேன்.ஆனால்,தற்போதைய சூழல் என்னை அரசியலுக்குத் தள்ளியது.

**கேள்வி : கோத்தாவை ஜனாதிபதியாக்குவதில் நீங்கள் முன்னின்று உழைத்தீர்கள். கடைசியில் அவர் எல்லாவற்றையும் குழப்பிவிட்டாரே.?**

பதில் : 69 லட்சம் பேர் அவர் மீது வைத்த அதே நம்பிக்கையைத்தான் நானும் வைத்தேன்.அவர் ஜனாதிபதியாவதற்கு முன் நல்ல திறமைசாலியாக இருந்தார்.இறுதியில் எல்லாவற்றையும் குழப்பிவிட்டார்.

பாதுகாப்பது செயலாளராக இருந்தபோது காண்பித்த திறமையை அவர் ஜனாதிபதியாகிக் காட்டவில்லை.

**கேள்வி : நீங்கள் ஒரு தொழிலதிபர். பொருளாதாரம் தொடர்பில் அனுபவமும் அறிவும் உள்ளவர்.ஏன் உங்களால் இந்த பொருளாதார பிரச்சினை வராமல் தடுக்க முடியவில்லை ?**

பதில் : இப்படியான ஒரு வீழ்ச்சி வரும் என்று நான் 2008 லேயே அறிந்துகொண்டேன்.பி.பி.ஜயசுந்தரவின் செயற்பாடுதான் எல்லா பிரச்சினைக்கும் காரணம்.அவர் ஜனாதிபதி செயலாளராக நியமிக்கப்படுவதற்கு அப்போதே எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

அவர் ஜனாதிபதி செயலாளராக நியமிக்கப்பட்ட செய்தியை தெரென அலெர்ட் ஊடாகத்தான் தெரிந்துகொண்டேன். அந்த நியமனத்துக்கு எனது எதிர்ப்பை நான் கோத்தாவிடம் முன்வைத்தேன். உங்களது அதிகாரம் பி.பி.ஜயசுந்தரவால் துஸ்பிரயோகம் செய்யப்படும் என்று கூறினேன்.

எனது எதிர்ப்பை கோத்தா ஏற்றுக்கொண்டார்.டொலர் பிரச்சினை வரும் என்பதையும் அது எப்படி வரும் என்பதையும் நான் கோத்தாவுக்கு அன்று விளக்கி கூறினேன்.ஆனால்,அதற்கு அவர் வழங்கிய பதில் அவரால் இந்த பிரச்சினையை நிர்வகிக்க முடியாது என்பதைக் காட்டியது.

**கேள்வி :பசில் ராஜபக்ஸ நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டபோது அதையும் எதிர்த்தீர்களா?**

பதில் : நிச்சயமாக .நான் 20 ஆம் திருத்தச் சட்டத்துக்கும் எதிர்ப்புத் தெரிவித்தேன்.

**கேள்வி : ராஜபக்ஸ குடும்பத்தை உங்களின் வர்த்தகத்தை வளர்த்துக்கொண்டீர்கள் என்று சிலர் குற்றம் சுமத்துகிறார்களே?**

பதில் : எனது வர்த்தகம் 35 வருட பழமை வாய்ந்தது.எனது முதலாவது வர்த்தகம் உயர் தரம் படிக்கும்போதே தொடங்கப்பட்டது. மஹிந்த ஜனாதியானது 2005இல் .அதற்கு முன்பே தெரென தொலைக்காட்சியும் ஆரம்பிக்கப்பட்டது.அரசியல்வாதிகளின் உதவி எனது வர்த்தகத்துக்கு பெறப்படவில்லை.

**கேள்வி : நீங்கள் ஒரு சட்டத்தரணி.அந்தத் தொழிலை செய்யாமல் நீங்கள் வர்த்தகத்தில் இறங்கியது ஏன்?**

பதில் : நான் சட்டத்தரணியாக வேண்டும் என்பது எனது பெற்றோர்களின் விருப்பம். எனது விருப்பம் வர்த்தகராக வேண்டும் என்பதுதான்.

பெற்றோரின் ஆசையை நிறைவேற்றுவதற்காக சட்டத்தரணியானேன். எனது ஆசைப்படி வர்த்தகரானேன்.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் போட்டியிடுவீர்களா ?**

பதில் : தேச பற்றுடைய-அந்த 69 லட்சம் போரையும் ,அந்த 69 லட்சம் பேருக்குள் அடங்காதவர்களையும் உள்ளடக்குகின்ற -நாட்டின் நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்திருப்பவர்களின் ஆசையை நிறைவேற்றுவதற்காகவே எமது கட்சி தோற்றம் பெற்றுள்ளது.

இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை மாத்திரம் இலக்காகக் கொண்டு இந்தக் கட்சி களமிறங்கவில்லை,இந்த கட்சியில் பல நிபுணர்கள்,புத்திஜீவிகள் இணைந்துள்ளனர்.

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக குறுகிய கால வேலைத்திட்டம் அல்ல இது.ஆனால்,இந்த ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் எமது கட்சி போட்டியிடும்.வெற்றிபெறக்கூடிய வியூகத்தை நாம் வகுப்போம்.

தற்போதைய பொருளாதார பிரச்சினையில் இருந்து மக்களை காப்பாற்றுவதற்கான சரியான-நிலையான வேலைத்திட்டத்துடன் நாம் பயணிப்போம்.மக்கள் நம்பக்கூடிய அரசியல் சக்தியை நாம் உருவாக்குவோம்.

**கேள்வி : மோசடியான முறையில் சம்பாதித்து வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இலங்கை சொத்துக்களை மீட்பது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன ?**

பதில் : இவ்வாறான முறையில் ஈட்டப்பட்ட சொத்துக்கள் வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ முதலீடு செய்யப்பட்டிருந்தால் அவை மக்களிடம் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உள்ளேன்.இந்த நாட்டில் ஊழல் ,மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதை மறுக்க முடியாது.- என்றார்.

**69 லட்சம் பேர் கோத்தாபய ராஜபக்சமீது வைத்த அதே நம்பிக்கையைத்தான் நானும் வைத்தேன். அவர் ஜனாதிபதியாவதற்கு முன் நல்ல திறமைசாலியாக இருந்தார். இறுதியில் எல்லாவற்றையும் குழப்பிவிட்டார். பாதுகாப்பது செயலாளராக இருந்தபோது காண்பித்த திறமையை அவர் ஜனாதிபதியாகிய பின்னர் காட்டவில்லை.**

# துப்பறிவாளன்

## தலைவர் ஒரு பக்கம் உறுப்பினர்கள் மறுபக்கம்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலையொட்டி கை கட்சி ஒரு முடிவை எடுக்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் என்று கை கட்சியினர் ஊகிப்பது தொலைபேசி கட்சியைத்தான்.அதனால் அக்கட்சியுடன் கூட்டணி வைப்பதற்கு கை கட்சி உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.

தலைவருக்கோ விருப்பமில்லை.ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதே அவரது விருப்பம்.

தலைவர் போட்டியிடுவதை உறுப்பினர்கள் விரும்பவில்லை.

வெல்ல முடியாத போட்டியில் ஏன் இறங்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இதனால்,தலைவரை விட்டுவிட்டு தொலைபேசியில் இணையும் நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளார்களாம்.

இதை அறிந்த பெரிய மேடம் யாரும் தொலைபேசி கட்சியுடன் இணைய வேண்டாம் என்று கை கட்சி உறுப்பினர்களிடம் கூறி வருகிறாராம்.

## அவரை பிரதராக்கியிருந்தால்



கோத்தாவின் ஆட்சியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது மக்கள் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரை பதவி விலகுமாறு கூறினர்.

முதலில் மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.அந்த இடத்துக்கு ரணில் நியமிக்கப்பட்டார்.

ஆனால்,ரணிலை பிரதமராக்குவதற்கு முன் வேறு ஒருவரை பிரதமராக்குமாறு விமல் வீரவன்ச தரப்பு கோத்தாவிடம் கோரிக்கை விடுத்தது.

கோத்தாவை நேரடியாக சந்தித்து அவரது பெயரை கோத்தாவிடம் முன்வைத்தனர்.

அவர்கள் சந்தித்துவிட்டு வந்ததும் ரணிலை பிரதமராக்கினார் கோத்தா.

இறுதியில் கோத்தாவும் பதவியை விட்டு ஓடவேண்டியேற்பட்டது.

அப்போதே விமல் தரப்பு சொன்ன அந்த மனிதரை பிரதமராக்கி இருந்தால் கோத்தாவும் ஓடியிருக்க மாட்டார் பொருளாதார பிரச்சினையும் தீர்ந்திருக்கும் என்கிறார் விமல்.

ஆனால்,அவர்கள் பிரேரித்த அந்த மனிதர் யாரென்றுதான் சொல்ல மறுக்கிறார் விமல். அது ஏனென்று தெரியாது.



## ஒற்றுமைப்படுத்திய ஜனாதிபதி

யானை கட்சியின் சூரியன்–சந்திரன் போல் இருந்த இருவர் நீண்ட காலமாக அவ்வளவு உறவாக இல்லையாம்.ஒருவர் கொழும்பின் பெரியவர்.அடுத்தவர் தெணியாய பகுதியில் உள்ளவர்.

இவர்களை ஒன்றுபடுத்தி கட்சியின் சில வேலைகளை செய்வதற்கு முடிவெடுத்த ஜனாதிபதி சில நாட்களுக்கு முன் கொழும்பு பெரியவரை தொடர்புகொண்டு இந்த பக்கம் ஒரு அதிதி வருகிறார் என்று கூறினார்.

யாரென்று அறிவதற்கு ஆர்வம் காட்டினார் கொழும்பு பெரியவர். வந்ததோ அந்த பழைய எதிரி.இருவரும் பழையதை மறந்து ஒற்றுமையாகிவிட்டனர்.

இருவரையும் ஒன்றுசேர்த்து மகிழ்ந்தார் ஜனாதிபதி.

## குழப்பத்தில் சஜித்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலையொட்டி கட்சி தாவல்களுக்கான முயற்சிகள் திரைமறைவில் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

ஜனவரி முதலாம் திகதி சிறிலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த ஷான் விஜயலால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கட்சி தாவலைத் தொடக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மேலும் பலர் அந்த கட்சிக்குத் தாவுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.

அவர்களுள் ஒருவர் சன்ன ஜயசுமன.

அவரை இணைப்பதில் சிக்கல் ஒன்று தோன்றியுள்ளது சஜித்துக்கு.

ஷாபி சிஹாப்தீன் விவகாரத்தில் சன்ன ஜயசுமன தீவிரமாக ஈடுபட்டு முஸ்லிம்களின் எதிர்ப்பை சம்பாதித்தவர்.

இப்படிப்பட்ட ஒருவரை கட்சிக்குள் சேர்த்தால் முஸ்லிம்களின் வாக்குகளை இழக்க வேண்டி வரும் என்று சஜித்துக்கு நெருக்கமானவர்கள் சஜித்தை அறிவுறுத்தி வருகிறார்கள்.

இதனால் சன்னவை இணைப்பதா,இல்லையா என்ற குழம்பில் இருக்கிறாராம் சஜித்.

## வேண்டாம்.....!!!



ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதில் பலர் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது.வெல்லுகின்ற தரப்பில் சேர்ந்தால்தான் தங்களின் அரசியல் இருப்பை காப்பாற்றிக்கொள்ள கொள்ள முடியும் என்பதுதான் அதற்கு காரணம்.

ஆனால், இதை சஜித் விரும்பினாலும் அக்கட்சியின் எம்பிக்கள் பலர் விரும்பவில்லை.

தாங்கள் கஷ்டப்பட்டு கட்சியை வளர்த்தெடுக்க கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்கள் இப்போது வந்து கட்சியை ஆக்கிரமிப்பதா என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

இதனால் எவரையும் இனி கட்சியில் சேர்க்க வேண்டாம் என்று அவர்கள் சஜித்துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள்.

## அநுரவை வீழ்த்துவதற்கு வியூகம்



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திஸாநாயகதான் வெல்வார் என்று பேசப்படுகிறது.உளவுத் தகவலும் அதையே சொல்கிறது.

இதனால் அதிருப்தியடைந்துள்ள ரணில் தரப்பு எப்படியாவது அனுரவை வீழ்த்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரிகிறது.

இதற்கு ஒரே வழி சஜித்தும் ரணிலும் இணைவதுதான் என்று அவர்கள் முடிவெடுத்துள்ளனர்.அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால்,அனுரவை வீழ்த்த வேண்டும் என்பதற்காக ரணிலுடன் இணைந்தால் சஜித்தின் எதிர்காலம் அவ்வளவுதான் என்கிறது சஜித் தரப்பு.

இருவரையும் இணைக்கும் எந்தவொரு யோசனைக்கும் இணங்க வேண்டாம் என்று சஜித்துக்கு அறிவுரை வழங்கியுள்ளார்களாம் சஜித்தின் விசுவாசிகள்.




# உபஹார 15 வருட பூர்த்தி

தேசிய தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், SLT-MOBITEL தனது உபஹார திட்டத்தின் 15 வருட பூர்த்தியை கொண்டாடுகின்றது.

தேசத்துக்கு சேவையாற்றும் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோரை கௌரவிக்கும் வகையில் 2008 ஆம் ஆண்டில் உபஹார அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், ளுடுவு-ஆழுடீஐவுநுடு இனால் இரு புதிய உபஹார பிற்கொடுப்பனவு பக்கேஜ்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட டேட்டா மற்றும் இணைப்புத்திறன் அனுகூலங்களுடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த இணைப்புகளினூடாக, அரச துறையைச் சேர்ந்த ஊழியர்களை வலுவூட்டும் வகையில் அமைந்திருப்பதுடன், டிஜிட்டல் இலங்கையை உருவாக்குவதற்கு அவர்களின் பங்களிப்பை மேலும் அதிகரிக்கச் செய்வதாகவும் அமைந்துள்ளது

இந்த இரு பக்கேஜ்களாலும் மேம்படுத்தப்பட்ட மொபைல் டேட்டா, குரல் மற்றும் ளுஆளு வசதிகள் எந்த வலையமைப்புக்கும் வழங்கப்படுவதுடன், கல்விசார், WhatsApp மற்றும் புகழ்பெற்ற தொடர்பாடல்களை பேணும் யீகளை பயன்படுத்தும் வசதியை SLT-MOBITEL, தனது உயர் வலையமைப்பின் வலிமையுடன் வழங்கியுள்ளது.

# DFCC வங்கிக்கு விருது




பசுமை பேண் முயற்சிகளுக்கான கடன்களை வழங்குவதில் இலங்கையில் முன்னோடியான DFCC வங்கி, பெருமதிப்புமிக்க SLIM Brand Excellence Awards 2023 விருதுகள் நிகழ்வில், ஆண்டின் மிகச் சிறந்த பசுமை வர்த்தகநாமத்திற்கான (Green Brand) சிறப்புத்தகமை (Merit Award) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

நிலைபேணத்தகு நடைமுறைகள் மீதான DFCC வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பு மற்றும் இலங்கையில் சூழல்நேயம்மிக்க பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் அதன் குறிப்பிடத்தக்க வகிபாகம் ஆகியவற்றை பெருமதிப்பிற்குரிய இந்த பாராட்டு அங்கீகாரம் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

சூழலைப் பேணும் முயற்சிகளை முன்னின்று மேற்கொள்ளல் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றில் வங்கியின் மூன்று தசாப்தகால நீண்ட பயணத்திற்கான ஒரு அங்கீகாரமாகவும் இவ்விருது அமைந்துள்ளது.

DFCC வங்கி பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா அவர்கள் அண்மைய SLIM Brand Excellence Awards 2023 நிகழ்வில் வங்கியின் சாதனை குறித்து பெருமையுடன் கருத்து வெளியிடுகையில், “நிலைபேற்றியல் மற்றும் பொறுப்புணர்வுடனான வங்கிச்சேவை மீது எமது அயராத அர்ப்பணிப்பை இச்சாதனை பிரதிபலிக்கின்றது. சூழல் மற்றும் சமூகத்தின் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதில் எமது தீவிரமான உழைப்பினை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் ஆண்டின் மிகச் சிறந்த பசுமை வர்த்தகநாமம் என்ற விருதை வென்றுள்ளமை எமக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய கௌரவம் என்றார்.

# யூனிலீவருக்கு புதிய தலைவர்

2024 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் தமது நிறுவனத்தின் புதிய தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக அலி தாரிக் நியமிக்கப்பட்டுள்ளதாக யூனிலீவர் ஸ்ரீ லங்கா (Unilever Sri Lanka) அறிவித்துள்ளது.

இந்த நியமனத்தின் மூலம், யூனிலீவரின் தெற்காசிய தலைமைக் குழுவிலும் தாரிக் அலி இணைவார். இதற்கு முன்னர், தாரிக் அலி லண்டனில் உள்ள யூனிலீவரின் தலைமையகத்தில், உலகளாவிய மாற்றங்களுக்கான CFO ஆக பணியாற்றியிருந்தார்.

2003 இல் இக்குழுவில் சேர்ந்த தாரிக் அலி, ஐரோப்பா, தெற்காசியா மற்றும் தூர கிழக்கு நாடுகளில் உலகளாவிய மற்றும் நாட்டின் தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். அவர் ஐளெவவைரவந ழக ஊாயசவநசநன Accountants in England & Wales (ICAEW) இன் உறுப்பினராக உள்ளதோடு லண்டன்ீறஊ இல் பயிற்சி பெற்றவரும் ஆவார்.



யூனிலீவர் ஸ்ரீ லங்காவில் தமது புதிய நியமனம் குறித்து தாரிக் அலி கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் உள்ள எமது நுகர்வோர், ஊழியர்கள், வணிகப் பங்காளிகள் மற்றும் சமூகங்களுக்கு சேவை செய்வதற்கும், நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் கிடைத்த இவ்வாய்ப்பு தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன். என்றார்.



# கறுப்புச் சந்தைக்கு வழிவகுக்கும் VAT

புதிதாக விதிக்கப்பட்டுள்ள ஏயுவு வரியானது பயன்படுத்திய வாகனங்களுக்கும் விதிக்கப்படுவதால், இத்தொழில்துறையில் கறுப்புச் சந்தையை உருவாக்குவதற்கு துணைபோவதாக ஊநலடழெ ஆழவழச வுசயனநசள யுளளழஉயைவழைெ (ஊஆவுயு) (சிலோன் மோட்டார் வாகன வர்த்தகர்கள் சங்கம்) தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அச்சங்கம், பயன்படுத்திய வாகனங்களின் சந்தை விலை உயர்வதன் காரணமாக, நாட்டின் சாமானியர்கள் பாதிக்கப்படுகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளது.

இத்தொழில்துறையில் உள்ள அதிகாரபூர்வ நிறுவனங்கள் தற்போது குறிப்பிடத்தக்க வகையில் தடைகளை எதிர்கொள்வதால், சமீபத்திய ஏயுவு அமுலாக்கமானது மோட்டார் வாகன வர்த்தகத்தில் பாரிய கவலைகளைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிறுவனங்கள் வாகனங்களை விற்கும் போது, புதிதாக விதிக்கப்பட்ட ஏயுவு வரியால் மேலதிகமாக 18மூ விலை அதிகரிப்புக்கு வழிவகுக்கின்றது. மறுபுறம், பெரும்பாலும் பண பரிவர்த்தனைகளில் ஈடுபடும் முறையற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால், இந்த மேலதிக வரிச் சுமையின்றி வர்த்தகத்தில் ஈடுபட முடிகின்றது.

அவர்களுக்கு அதிக போட்டித் தன்மை கொண்ட 18மூ நன்மையை இது வழங்குகிறது. இந்த நிலைமையானது, அதிகாரபூர்வ நிறுவனங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதோடு, கறுப்புச் சந்தை போட்டியாளர்களுக்கு சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது என்று அச்சங்கம் மேலும் கூறியுள்ளது.

# Viman திட்டத்தின் மாதிரி அடுக்குமாடி வீடுகள்



John Keells Properties நிறுவனம் தனது சமீபத்திய குடிமனைத் திட்டமான ஜாஎல – Viman திட்டத்தின் மாதிரி வீடுகளை 2024 ஜனவரி 24ஆம் திகதி 186, வொக்ஷால் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் உள்ள John Keells Properties அலுவலகத்தில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியது.

‘புதிய உலகத்தை உருவாக்குதல்’ மற்றும் வாழ்க்கை அனுபவத்தை மீள வரையறுப்பதற்கான தெரிவுகளை வழங்குதல் என்ற உருவாக்குனர்களின் நோக்கத்திற்கு இணங்கும் வகையில் ஜா – எலவின் இதயப் பகுதியில் வாழக்கூடிய இடமாக மாற்ற ஏைஅயெ எவ்வாறு தயாராக உள்ளது என்பதை விரிவாகப் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், இதன் விபரங்கள் விரிவாக விளக்கமளிக்கப்பட்டன. கனவு நிறைந்த வாழ்விடங்களை உருவாக்குதல் மற்றும் இணையற்ற அனுபவத்தை வழங்குவதில் புத்தாக்கமான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ரியல்எஸ்டேட் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவதில் John Keells Properties நிறுவனம் நற்பெயரைப் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய John Keells Properties நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலுக்கான தலைவரும், துழாெ முநநடடள புசழரி இன் பிரதித் தலைவருமான நதீம் ஷம்ஸ் தெரிவிக்கையில், “சாதாரண குடிமனைத் தொகுதியாக மாத்திரம் அல்லாத ஏைஅயெ குடிமனைத் திட்டத்தின் மாதிரி வீடுகளைக் காட்சிப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சமநிலை, இயற்கை மற்றும் நவீன சௌகரியம் போன்ற கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு சுற்றுச்சூழல் பற்றிய உணர்வு, பல்வேறு இடங்களுக்கான அணுகல் மற்றும் சமூக உணர்வை வளர்ப்பது போன்ற சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட குடியிருப்புத் தொகுதிகளை ஏைஅயெ கொண்டுள்ளது. Viman இல் வீட்டைச் சொத்தமாக்கிக் கொள்ள விரும்பும் எதிர்கால உரிமையாளர்கள் கொழும்பில் அதன் மாதிரி வீடுகளைப் பார்வையிட முடியும் என்பதுடன், அவர்களுக்குக் காணப்படும் கேள்விகளுக்கான பதில்களை எமது துறைசார் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்” என்றார்.

# டிஜிட்டல் பண மீளப்பெறல் மற்றும் கொடுப்பனவு வசதி அறிமுகம்




முன்னணி முதலீட்டு தீர்வுகள் வழங்குநரான First Capital Holdings PLC, இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் வசதியை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

First Capital Money Plus Fund இன் அறிமுகத்துடன், நுஆஏ செயற்படுத்தப்பட்ட அட்டையினூடாக இலங்கையில் முதன் முறையாக நம்பிக்கை அலகு முதலீட்டு கணக்குகளிலிருந்து சௌகரியமாக பணத்தை மீளப் பெறும் வசதியை அறிமுகம் செய்துள்ளது.

புதிய நிதியத்தின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், காப்பாளர் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக உடீே உடன் குசைளவ ஊயிவையட கைகோர்த்துள்ளது. புதிய புத்தாக்கமான நிதியத்தினூடாக நம்பிக்கை அலகு கணக்குதாரர்களுக்கு, தமது முதலீடுகளை EMV செயற்படுத்தப்பட்ட அட்டையினூடாக சௌகரியமாக அணுகும் வசதி வழங்கப்படும்.

First Capital Holdingsீடுஊ இன் சொத்துகள் முகாமைத்துவ பிரிவின் நிறைவேற்று உப தலைவர் கவின் கருணாமூர்த்தி இப் புதிய தீர்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “First Capital என்பது இலங்கையின் மூலதன சந்தையில், எப்போதும் பல புரட்சிகரமான அம்சங்களை அறிமுகம் செய்வதில் “முதன்மையாக” (First) திகழ்கின்றது. எமது வர்த்தக நாம உறுதி மொழியான “செயற்திறனுக்கு முதலிடம்” (’Performance First) என்பதற்கமைய, இந்த புரட்சிகரமான தீர்வை நாம் அறிமுகம் முதலீட்டு சந்தையில் செய்வதுடன், பாரம்பரிய முதலீட்டு அம்சங்களுடன் ஒப்பிடுகையில் கவர்ச்சிகரமான வருமானத்தை வழங்கும் நிதியமாகவும் திகழ்கின்றது – என்றார்.

# NHS மற்றும் Care England UK புரிந்துணர்வு ஒப்பந்தம்




இலங்கையின் சுகாதாரக் கல்வியின் முன்னோடியான International Institute of Health Sciences (IIHS) ஐக்கிய இராச்சியத்தின் முன்னணி சுகாதார சேவை நிறுவனங்களான National Health Services (NHS) மற்றும் Care England UK நிறுவனங்களுடன் நேரடி உறவுகளை ஏற்படுத்திக்கொண்ட தெற்காசியாவின் முதலாவது கல்வி நிறுவனம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

IIHS மற்றும் NHS நிறுவனங்களுக்கிடையே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் IIHS வத்தளை வளாகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு அதன் கீழ் பாடவிதானங்களை தயாரித்தல், கிளினிக் பயிற்சி திட்டங்கள் மற்றம் அறிவு பரிமாற்றல் திட்டங்கள் தொடர்பாக இரண்டு நிறுவனங்களும் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

அதன் மூலம் ஐஐஉளு நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவ, மாணவியர்கள் சர்வதேச சுகாதார நியமங்கள் மற்றும் நடைமுறைகளுக்குட்படுவார்கள். இந்த ஒப்பந்தத்தின் பெறுபேறாக 100 இற்கும் மேற்பட்ட சுகாதார வல்லுநர்கள் மற்றும் தாதியர்கள் இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Care England UK நிறுவனத்துடன் நிறுவப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பரந்துபட்ட சுகாதார கல்வி வசதிகளை வழங்குவதற்கு IIHS நிறுவனத்துக்குள்ள அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்துகிறது.

முதியோர் பராமரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு சேவை வழங்குநர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் Care England ருமு ஒருங்கிணைந்த ஆராய்ச்சி கருத்திட்டங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பாட விதானங்களுக்கு சம்பவ கற்கை போன்ற விடயங்கள் தொடர்பாக IIHS நிறுவனத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றது.

# HSBCஇன் கலை இலக்கிய விழா

இலங்கையின் இலக்கியம், கலைகள் மற்றும் கலாசார வளங்களுக்கு தலை வணங்குகிறோம்.

முதலாவது நிகழ்வு கண்டி மற்றும் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இலங்கையின் கண்டி மற்றும் கொழும்பு ஆகிய வரலாற்று, பாரம்பரியமிக்க நகரங்களில் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இலங்கை இலக்கிய மற்றும் கலை விழாவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த கால வரலாற்றைக் கொண்ட தீவான இலங்கை , தொடர்ச்சியாக முகம் கொடுத்த பல்வேறு சவால்களில் இருந்து படிப்படியாக மீண்டு வருகிறது. இந்த விழா நாட்டின் இலக்கியம் மற்றும் படைப்புத் துறைகளை மாற்றியமைத்து உயர்த்துவதற்கான ஒரு படியாகும்.

நாட்டின் வளமான கலாசார ஐதீகம், அழகிய நிலத்தோற்றங்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதுடன் சுற்றுலாப் பயணிகள், முதலீட்டாளர்கள் மற்றும் புதிய பங்காளிகளுக்கு இலங்கையினை முதன்மையான இடமாக நிறுவுவதுமே இதன் நோக்கமாகும்.

“எமது பங்காண்மை மூலம், நடக்கவிருக்கும் இலங்கை இலக்கியம் மற்றும் கலை விழாவில் எமது வாடிக்கையாளர்களுக்கு இலக்கியம், கலை மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் ”உலகின் சிறந்ததை” கொண்டு சேர்ப்பதே எமதுஅபிலாஷையாகும். இதன் மூலம் இலங்கையின் முன்னணி சர்வதேச வங்கி என்ற வகையில், புகழ்பெற்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினருடன் தொடர்புகொள்வதற்கான வாய்ப்பை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். என்று உளுடீஊயின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் சேர்ஜினர் தெரிவித்தார்.

